திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப்பாதையின் குறுக்கே மேம்பாலம்

*81 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப்பாதையில் லாலாப்பேட்டை அருகில் இருப்புப்பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம். பரிசிலனையிலுள்ளது.

கோயம்புத்தூர் பேருந்து நிலையத்திற்கருகில் மேம்பால வேலை

*82 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் பேருந்து நிலயத்திற்கருகில் மேம்பாலம் (Level Crossing) கட்டும் வேலை எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1973-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிவுறும்

திரு. சு. துரைசாமி: இந்தத் திட்டத்தை ஆரம்பித்த நேரத்தில் எப்போது முடிக்கப்படும் என்று குறிப்பிருக்கிறதா? அந்தத் திட்டத்திற்கு ஆகக்கூடிய மொத்தச் செலவு என்ன? இப்போது நடைமுறையில் அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகியிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எற்கெனவே 1973 டிசம்பருக்குள் முடிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1973 டிசம்பருக்குள் அந்த வேலை முடிந்துவிடும் என்றே எதிர்பார்க்கிறேன். இந்தத் திட்டத்திற்காகப் போடப்பட்ட மொத்த எஸ்டிமேட் 40 லட்சம். டெண்டர் அனுமதிக்கப்பட்டது 35 லட்சத்து 20 ஆயிரத்து 300 ரூபாய்.. இதுவரை என்னிடம் உள்ள புள்ளிவிவரப்படி 19.32 லட்சம் செலவாகியிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? ஆரம்பத்தில் போட்ட எஸ்டிமேட் எவ்வளவு? இப்போது திருத்தப்பட்ட மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முன்பு 40 லட்சம் எஸ்டிமேட் போடப்பட்டது. The estimated cost is roughly estimated at Rs. 44 lakhs.